15.03.2024

<u>கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.</u>

<u>அமர்வு வழக்கு எண்.205/2018</u>

அ.சா. 13

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஷர்மிளா | | |
| க/பெ | ராஜீவ்காந்தி | | |
| கிராமம் | விழுப்புரம் | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 38 /2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது விழுப்புரம் இருப்பு காவல் நிலையத்தில் காவலராக பணி செய்து வருகிறேன். தற்போது அதே காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணி செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் அனைவரையும் எனக்கு நன்கு தெரியும். கடந்த 06.05.2014 அன்று காலை 9.30 மணிக்கு நான் சி.சி.டி.என்.எஸ்.பிரிவில் டேட்டா ஆப்ரேட்டர் பணிக்கு வந்தேன். நான் காலை 9.30 மணிக்கு வந்து மதியம் 2 மணிக்கு சென்று மீண்டும் மாலை 5 மணிக்கு நிலையம் வருவேன். மீண்டும் இரவு 8.30 மணிக்கு வீட்டிற்கு செல்வேன். அன்று என்னுடன் கலா என்பவர் பணியிலிருந்தார். நான் உள்ளே சிஸ்டம் அறையில் பணியில் இருந்தேன். மதியம் சாப்பிடும்போது இரண்டு பேர் அங்கு உட்கார்ந்துக்கொண்டு இருந்தார்கள். அதன் பிறகு நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். மாலை 5 மணிக்கு மீண்டும் வந்தேன். நான் வந்தவுடன் ஆவணங்களை பார்த்துவிட்டு பதிவு செய்துவிட்டு சென்றுவிட்டேன். மறுநாள் 07.05.2014 அன்று மழையாக இருந்ததால் காலை 10.30மணிக்கு பணிக்கு வந்தேன். நான் வரும்போதே காவல் நிலையத்தில் கூட்டமாக இருந்தார்கள். நான் மெயின் வழியாக போகாமல் காவல் நிலையத்தின் பின்புறம் வழியாக வந்தேன்.அப்போது காவலர் சித்ரா மற்றும் எஸ்.பி.ஏட்டு, ரவி ஆகியோர் போனில் அடிக்கடி யாருக்கோ பேசிக்கொண்டிருந்தார்கள். நான் சித்ராவை கூப்பிட்டு

விவரத்தை கேட்டேன். அதற்கு அவர் ஜெயவேல் என்பவருக்கு உடல்நிலை சரியில்லாததால் மருத்துவமனைக்கு அழைத்து சென்றுள்ளதாக கேள்விப்பட்டதாக என்னிடம் தெரிவித்தார். நான் அப்போது சிவில் உடையில் வந்திருந்தேன் அதனால் யூனிபார்ம் அணிந்துவரலாம் என்று வீட்டிற்கு வந்துவிட்டேன். மீண்டும் 2 மணிக்கு காவல் நிலையம் வந்துவிட்டேன். வந்தபோது காவல் துறை மேல்அதிகாரிகள் வந்து விசாரணை நடத்தினார்கள். நான் அங்கு உள்ளேயே செல்லவில்லை. பக்கத்தில் இருந்த ஆட்டோ ஸ்டேன்ட் அருகில் இருந்தேன். ஜெயவேல் என்ன ஆனார் என்று எனக்கு அப்போது தெரியாது. நான் மேல்அதிகாரிகள் விசாரணை செய்துகொண்டிருந்ததை வைத்து ஜெயவேல் இறந்துவிட்டார் என்பதை தெரிந்துக்கொண்டேன். இது சம்மந்தமாக வேலூர் சி.பி.சி.ஐ.டி ஆய்வாளர் அவர்கள் விசாரணை செய்தார்கள்.

**அனைத்து எதிரிகள் தரப்பிலும் குறுக்கு விசாணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.**